
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
சாமளாபுரம் பேரூராட்சி

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சாமளாபுரம் பேரூராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்: 205/1ஏ2, 247/3பி, 247/4பி2, 247/5பி (ம) 248/2பி-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.



அளவு = 1 : 800

இணையதள விண்ணப்ப எண் : XKUNM6NU

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 2.23¾ ஏக்கர் (அ) 9054.84 ச.மீ

கோரிய மனைகள் : 40

ஒதுக்கிய மனைகள் : 39

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

i) மனைப்பிரிவு சாலை பரப்பு = 3500.22 ச.மீ

ii) பூங்காவிற்கு தேவையான பரப்பு

= (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 10 %

= (9054.84 ச.மீ - 3500.22 ச.மீ) = 5554.62 ச.மீ x 10 % = 555.46 ச.மீ

(அரசாணை எண். 18 ந.நி (ம) கு.வ.துறை நாள்: 04.02.2019-ல் தெரிவித்துள்ளபடி OSR பரப்பிற்கான அரசு வழிகாட்டு மதிப்புத்தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.)

iii) உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு = (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

தேவையான பரப்பு = (9054.84 -3500.22) x 0.5 % = 27.77 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 47.93 ச.மீ = 0.86 %

iv) TANGEDCO-க்கு (அ) உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு = (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

தேவையான பரப்பு = (9054.84 -3500.22) x 0.5 % = 27.77 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 40.50 ச.மீ = 0.73 %

முலை முடக்கு: 12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 18 ந.நி (ம) கு.வ.துறை நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16 ந.நி (ம) கு.வ.துறை நாள்: 31.01.2020 ஆகியவற்றின்படி சாலைகள், பொது உபயோகம் (ம) TANGEDCO-க்கான பரப்பு உள்ளாட்சிக்கு தானமாகவும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் செயல் அலுவலர், சாமளாபுரம் பேரூராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 60cm x 120cm அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. அரசாணை எண். 181 வீ.வ (ம) ந.வ.துறை நாள்: 09.12.2020 தெரிவித்துள்ளவாறு தார் சாலை, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள், மின்கம்பங்கள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7. அரசானை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. மனையிடத்தின் ஊடே செல்லும் குறைந்த மின் அழுத்த கம்பிப்பாதை மற்றும் தொலைபேசி இணைப்புப்பாதை ஆகியவற்றை மனுதாரர் தமது சொந்த செலவில் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.
9. மனையிடத்தின் ஊடே செல்லும் நீர்வழிப்பாதையினை தடைகள் ஏதும் ஏற்படாதவாறு மனைப்பிரிவின் உத்தேச சாலைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும் (ம) TNCDBR - 2019 கட்டிட விதி 55 (1),(2) பின்பற்றப்பட வேண்டும்.

ம.வ. / கோ.உ.தி.கு எண்: **314 / 2024**
திட்ட அனுமதி எண்: **361 / 2024** — இணைய வழி

க.செல்வகுமார்
வரைவாளர் நிலை - III

மு.வளர்மதி
கட்டடத்தலை. / திட்ட உதவியாளர்

Signature valid
Signed by: Joint Director
Location:Coimbatore
Date:2024.06.11 13:07:39

Signature valid
Signed by: Executive Officer
Location:Tiruppur
Date:2024.09.26 12:38:06

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.